www.tamilarangam.net

# மரணதண்டனை- மறு ஆய்வு தேவை

மக்கள் சிவில் உரிமைக் கழகம்

(தமிழ்நாடு - புதுச்சேரி)

புதுமலர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மரணதண்டனை – மறு ஆய்வு தேவை

மக்கள் சிவில் உரிமைக்கழகம் (தமிழ்நாடு/புதுச்சேரி)

ஹீசைனா மன்சில், மூன்றாம் மாடி,
255 (123), அங்கப்பநாயக்கன் தெரு,
சென்னை – 600 001
தொலைபேசி : 91–44–2535 2459
மின்னஞ்சல் : rightstn@gmail.com

முதல் பதிப்பு : ஆகஸ்டு 2011

**புதுமலர் பதிப்பகம்**

176 வைகை வீதி
வீரப்பன் சத்திரம் (அ)
ஈரோடு 638 004
அலைபேசி : 9443307681
மின்னஞ்சல் : newflower_kurinji@yahoo.co.in

அச்சாக்கம்
**ஸ்ரீ விக்னேஷ் பிரிண்டர்ஸ்**
சென்னை – 600 083

**நன்கொடை : ரூபாய் 5/–**



மனித உரிமைப் போராட்ட வரலாற்றில் அழியாத சுவடுகளைப் பதித்துச் சென்ற –

நம் நெஞ்சில் நிறைந்து வாழும் மூத்த வழக்கறிஞர் –

தம்வாழ்வின் இறுதிவரை மரணதண்டனை ஒழிப்பிற்காக அர்ப்பணிப்புடன் உழைத்த களப்போராளி –

மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் (பி.யூ.சி.எல்) முன்னாள் அகில இந்தியத் தலைவர் –

**திருமிகு.கே.ஜி.கண்ணபிரான்**

(09.11.1929 – 30.12.2010)

அவர்களின் வீர நினைவுக்கு –

# பதிப்புரை

**கண. குறிஞ்சி**

**இந்தியத் துணைக் கண்டத்தில் மிகப்பெரிய மனித உரிமை அமைப்பாக மக்கள் சிவில் உரிமைக் கழகம்** (People's Union for Civil Liberties – PUCL) விளங்குகிறது. இந்தியாவின் முன்னாள் துணைக் குடியரசுத் தலைவர் **கிருஷ்ணகாந்த்**, பேராசிரியர் **ரஜினி கோத்தாரி**, நீதிபதி **தார்க்குண்டே**, நீதிபதி **இராஜேந்தர் சச்சார்**, மூத்த வழக்கறிஞர் **கே.ஜி.கண்ணபிரான்**, பேராசிரியர் **ஜிப்பர்** ஆகியோர் பியூசிஎல் அமைப்பில் பெருமைமிக்க பணியாற்றியுள்ளனர். தமிழ்நாடு அமைப்பில் **எஸ்.வி.இராஜதுரை** அவர்களது பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்ட பி.யூ.சி.எல் அமைப்பு பல்வேறு வழக்குகளைத் தொடுத்து, ஏழை – எளிய மனிதர்களின் உரிமையை நிலைநாட்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, மிக அண்மைக்காலத்தில் பி.யூ.சி.எல். மக்களுக்கு பெற்றுத்தந்த சில உரிமைகளை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தொலைபேசியில் ஒட்டுக்கேட்பதைத் தடுக்கக் கோரிய (1997) வழக்கில், தனி மனிதரது அந்தரங்கம் பாதுகாக்கப்படவேண்டும் (Right to Privacy) எனும் தீர்ப்பைப் பெற்றது. அதேபோல் பி.யூ.சி.எல். தொடுத்த மற்றோர் வழக்கில், தேர்தலில் நிற்பவர்களது சொத்து விவரம் மற்றும் அவரது குற்றப்பின்னணி குறித்து வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும் எனும் தீர்ப்பைப் பெற்றது (2003). வீடற்றவர்களுக்கும், அநாதைகளுக்கும் இரவில் தங்குவதற்குப் பாதுகாப்பான இடங்களை அரசு வழங்க வேண்டும் என்ற தீர்ப்பை (2010) பெற்றது. மேலும் மக்களுக்கு உணவு பெறும் உரிமையையும் பி.யூ.சி.எல் உத்தரவாதப்படுத்தியுள்ளது (Food right). காவல் நிலையச் சாவுகள், மோதல் சாவுகள் (Encounter deaths) ஆகியன தடுக்கப்பட வேண்டும் எனும் தீர்ப்பினையும் பி.யூ.சி.எல். பெற்றுள்ளது. இப்படிப் பல்வேறு மக்கள் சார்பான தீர்ப்புகளை இவ்வமைப்பு கடும் சட்டப் போராட்டத்திற்குப் பிறகு பெற்றுள்ளது. இவை அனைத்தும் உச்ச நீதிமன்றத்தில் வழக்காடிப் பெற்ற மனித உரிமை பேணும் தீர்ப்புகளாகும். மேலும் தடா, பொடா ஆகிய சட்டங்களை எதிர்த்து நீதிமன்றத்திலும், நீதிமன்றத்திற்கு வெளியிலும் போராட்டங்களை பி.யூ.சி.எல் முன்னெடுத்தது.

தவிரவும், மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் மற்றோர் குறிப்பிடத்தக்க அம்சம், **இவ்வமைப்பு எந்தவொரு நிதி உதவியையும் உள்நாட்டிலிருந்தோ வெளிநாட்டிலிருந்தோ பெறுவதில்லை** என்பதாகும். இவ்வமைப்பில் உள்ளவர்கள் தங்களது சொந்தப் பொறுப்பிலிருந்துதான் மனித உரிமைக்கான பணியைத் தொடர்ந்து முனைப்புடன் செய்து வருகின்றனர்.

மரண தண்டனை இந்தியாவிலிருந்து முற்றிலும் ஒழிக்கப்படவேண்டும் என பி.யூ.சி.எல் அமைப்பு அது தோற்றுவிக்கப்பட்ட ஆண்டிலிருந்து – 1975 – தொடர்ந்து முயற்சித்து வருகிறது. கோவை மாவட்டத்தைச் சேர்ந்த கோவிந்தசாமி என்பவர் தனது தூக்கு தண்டனையைக் குறைக்கக்கோரிக் கருணை மனு கொடுத்தார். இரண்டு முறை அவரது கருணை மனு மறுக்கப்பட்டது. தண்டனை நிறைவேற இரண்டு நாட்கள் இருக்கையில் அவரது தூக்கு, பி.யூ.சி.எல் அமைப்பின் இடையறாத முயற்சியால் தடுத்து நிறுத்தப்பட்டது (2000) என்பது குறிப்பிடத்தக்கது.

1950 முதல் 2006 வரையிலான ஐம்பத்தாறு ஆண்டுகளில் மரண தண்டனை குறித்து இந்தியாவில் வழங்கப்பட்ட எழுநூற்றுக்கும் அதிகமான உச்சநீதிமன்றத் தீர்ப்புகளையும், அவற்றின் சாரத்தையும் பி.யூ.சி.எல் அகில இந்தியச் செயலர் **முனைவர் வி.சுரேஷ்** அவர்கள் தொகுத்துள்ளார். அதை பி.யூ.சி.எல் தமிழ்நாடு/புதுச்சேரி அமைப்பு மே 2008 – ல் ‘சாகடிக்கும் லாட்டரி’ (Lethal Lottery – The Death Penalty in India) எனும் நூலாக வெளியிட்டது. இந்நூல் பன்னாட்டு மன்னிப்பு அவையின் (Amnesty International) ஒத்துழைப்போடு வெளியிடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்த நூலில் சுட்டிக்காட்டப்பட்ட வாதங்களை அடிப்படையாக வைத்து அண்மையில் உச்ச நீதிமன்றம் இரு மரண தண்டனை வழக்குகளில் தண்டனைக் குறைப்பு செய்துள்ளது.

[சுவாமி சிரதானந்தா (எதிர்) கர்நாடக அரசு (2008)/ சந்தோஷ் குமார் (எதிர்) மகராஷ்டிர அரசு (2009)]

அரிதினும் அரிதான (The rarest of the rare cases) வழக்கில்தான் மரண தண்டனை வழங்கப்படவேண்டும் எனச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், எது அரிதினும் அரிதான வழக்கு என்பது குறித்துத் திட்டவட்டமான வரையறைகள் ஏதுமில்லை. எனவே ஒரே குற்றச்செயலுக்கு ஒரு நீதிமன்றத்தில் ஒருவருக்கு மரணதண்டனை வழங்கப்படுவதும், பிறிதோர் நீதி மன்றத்தில் அவர் மரண தண்டனையிலிருந்து விடுவிக்கப்படுவதும், ஒரேவிதமான குற்றத்திற்காக ஒருவருக்கு மரணதண்டனையும், மற்றொருவருக்கு தண்டனைக்குறைப்பு வழங்கப்படுவதும் தொடர்ந்து இந்தியாவில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இராஜீவ் காந்தி கொலை வழக்கிலேயே முதலில் 26 பேருக்கும் ஒட்டுமொத்தமாக மரணதண்டனை வழங்கப்பட்டதும், பிறகு நான்கு பேருக்கு மட்டும் மரணதண்டனை எனக் குறைக்கப்பட்டதும் அனைவரும் அறிந்ததே! வெவ்வேறு நீதிமன்றங்களில் இத்தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தாலும், இத்தகைய தீர்ப்பிற்குத் தர்க்க அடிப்படை இல்லை என்பதையே இது காட்டுகிறது. எனவேதான் தென்னாப்பிரிக்காவின் அரசியல் சட்ட வழக்கு மன்றத்தில் அரசு(எதிர்) மெக்வான்யானே மற்றும் மச்சுனு (1995) [ State Vs Makwanyane & Machunu (1995) Constitutional Court of South Africa ] வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி **“மரண தண்டனை என்பது மிகவும் ஆபத்தான சாகடிக்கும் ஒரு லாட்டரி”** எனக் குறிப்பிட்டார். லாட்டரியில் யாருக்குப் பரிசு விழும் என்பது தெரியாதது போலவே, குற்றவழக்கில் யாருக்குத் தூக்கு தண்டனை என்பதும் தெரியாமல் போய்விடுகிறது. இதைத்தான் பொது மக்கள் அதிர்ஷ்டம் எனக் குறிப்பிடுகின்றனர். மேலும் மரணதண்டனையை நீக்கினால், நாட்டில் குற்றங்கள் அதிகரித்துவிடும் எனக் கூறுகின்றனர். ஆனால் இதற்கு அறிவியல் அடிப்படை ஏதும் இல்லை. மரணதண்டனையை ஒழித்த நாடுகளில் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்பதை பல நாடுகளின் அனுபவத்திலிருந்து நாம் உணர்கிறோம்.

எனவே இத்தகைய தர்க்கமற்ற, கொடிய, மனித நாகரிகத்திற்குப் புறம்பான மரணதண்டனையை உலகில் தற்பொழுது 137 நாடுகள் ஒழித்துள்ளன. இந்தியாவும் – குறிப்பாகத் தமிழ்நாடும் – இந்த அணி வரிசையில் இணைய வேண்டும். பேரறிவாளன் – முருகன் – சாந்தன் ஆகியோரது மரண தண்டனையைக் கைவிடுவதிலிருந்து இந்த முயற்சியைத் தொடங்கவேண்டும் எனத் தமிழ் நாட்டு மக்களும், புலம் பெயர்ந்த தமிழ் மக்களும், அனைத்து மனித உரிமை ஆர்வலர்களும் காத்துக் கொண்டிருக்கின்றனர். எனவே தமிழக முதல்வர் அவர்களும், தமிழ்நாடு அரசும் இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில்

www.tamilarangam.net

முன்மாதிரியான முடிவினை இவ்வழக்கில் எடுக்க வேண்டும் என பி.யூ.சி.எல் அமைப்புக் கனிவுடன் வேண்டுகிறது.

இந்தப்பின்னணியில் மரண தண்டனை குறித்து மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் நிலைப்பாட்டை விளக்கத்தக்க வகையில் இக்குறுவெளியீடு வெளிவருகிறது. 2000 ஆம் ஆண்டிலேயே மரண தண்டனைக்கு எதிரான கருத்துக்களைத் திரட்டி '**மரணதண்டனை தேவையா?**' என்ற நூலை பி.யூ.சி.எல் சார்பாக **புதுமலர் பதிப்பகம்** வெளியிட்டது. அதைக் காலஞ்சென்ற **திரு.ஜிப்பர்,** பி.யூ.சி.எல். கொடைக்கானல் மாநாட்டில் வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். பி.யூ.சி.எல் அமைப்பின் அகில இந்தியச் செயலர் முனைவர் **திரு.வி.சுரேஷ்** அவர்கள், மூத்த வழக்கறிஞர் **திருமதி நாகசைலா சுரேஷ்,** மக்கள் சிவில் உரிமைக் கழகம் (தமிழ்நாடு – புதுச்சேரி) அமைப்பின் துணைத் தலைவர் **திரு.கண.குறிஞ்சி,** கோவை பி.யூ.சி.எல். அமைப்பைச் சேர்ந்த **திரு.பொன். சந்திரன்** ஆகியோரது ஒத்துழைப்புடன் இப்பொழுது வெளிவரும் இக்கொள்கை அறிக்கையை வெளிக்கொணர்ந்துள்ளார். தமிழ்கூறு நல்லுலகம் தூக்குக் கயிற்றை அறுத்தெறியும் ஓர் ஆயதமாக இவ்வெளியீட்டைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என மக்கள் சிவில் உரிமைக் கழகம் விரும்புகிறது.

❀ ❀ ❀

இந்த அறிக்கை வெளிவர அனைத்து அலுவலக உதவிகளையும் செய்த சென்னை பி.யூ.சி.எல் அலுவலகத்தைச் சேர்ந்த **திரு.க.சரவணன், திரு.எஸ்.நந்தகுமார்** ஆகியோருக்கு எம் நன்றி. இவ்வழக்குக்குத் தேவையான சில விவரங்களைக் கொடுத்துதவிய மரணதண்டனைக்கு எதிரான மக்கள் இயக்கப் பொறுப்பாளர்கள் வழக்குரைஞர் **திரு.செல்வராஜ், திரு.பாலமுரளிவர்மன்** ஆகியோருக்கும் எமது நன்றி. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இவ்வறிக்கையைத் தமிழில் மொழியாக்கம் செய்ய எனக்கு வாய்ப்பளித்த மக்கள் சிவில் உரிமைக் கழகத் தோழர்களுக்கும் எமது நன்றி.

**ஆகஸ்டு 23/2011** **புதுமலர்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மரணதண்டனை – மறுஆய்வு தேவை

**மக்கள் சிவில் உரிமைக் கழகம் (பி.யூ.சி.எல்)**

இந்தியாவில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டபோது அதை எதிர்த்து ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 'மக்கள் நாயகர்'ஜெயப்பிரகாஷ் நாராயணன், ஆச்சாரிய கிருபளானி, புகழ் வாய்ந்த விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் மக்கள் தொண்டாற்றும் குடிமக்கள் பலராலும் உருவாக்கப்பட்ட மனித உரிமை அமைப்புதான் மக்கள் சிவில் உரிமைக் கழகமாகும் (People's union for Civil Liberties – PUCL). இவ்வமைப்பு உருவாக்கப்பட்ட 1975 ஆம் ஆண்டிலிருந்தே மரண தண்டனை என்பது கொடுங்கோன்மையானது; தன்னிச்சையானது; நேர்மையற்றது; மனிதமாண்புகளுக்கு முரணானது என்பதை பி.யு.சி.எல் வலியுறுத்தி வருகிறது. சமூகத்தில் எழும் சிக்கல்களுக்கு உயிரைப்பறிக்கும் அணுகுமுறை, அரசமைப்புச் சட்டத்தின் மதிப்பீடுகளுக்கும், ஜனநாயகக் கருத்தியலுக்கும் ஏற்புடையதல்ல! ஏனெனில் ஏழை எளியோர்களும் குற்றமற்றவர்களும்தான் இறுதியில் அதிக அளவு இதற்கு இரையாகின்றனர் என்பது எங்களது நிலைபாடு ஆகும். எனவே இத்தகைய கொடூரத் தண்டனையை ஒழித்துக்கட்டிய உலகிலுள்ள 137 நாடுகளின் அணிவரிசையில் இந்தியாவும் இணைய வேண்டுமெனத் தொடர்ந்து நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

1991 ஆம் ஆண்டு நிகழ்ந்த இராஜீவ்காந்தி கொலையில் தொடர்புடைய சாந்தன் – முருகன் – பேரறிவாளன் ஆகியோரது தூக்கு தண்டனையைக் கைவிடக்கோரும் கருணை மனு மத்திய அரசு அமைச்சரவையின் அறிவுரைக்கு ஏற்ப இந்தியக் குடியரசு தலைவரால் மறுக்கப்பட்ட சூழலில், அம்மூவரின் உயிர் பறிக்கப்படவிருக்கிற மிக அவசரமான சூழலில், மீண்டும் எங்கள் நிலைபாட்டை வலியுறுத்துகிறோம்.

**இந்திய தண்டனைச் சட்டம் (IPC)** பிரிவு **54 மற்றும் பிரிவு 55A குற்றவியல் நடைமுறைச் சட்டம் (Cr.P.C) பிரிவு 432(a) மற்றும் 433(7), இந்திய அரசமைப்புச் சட்டம் விதி 161 ஆகிய சட்டங்களின் அடிப்படையில் மூவரது தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கும்படி தமிழக அரசை வேண்டுகிறோம். அவர்களது உயிரைக் காக்குமாறு கனிவுடன் கோருகிறோம்.**

**வழக்கு விவரம்**

சென்னையிலிருந்து 40 கி.மீ தொலைவில் இருக்கும் ஸ்ரீபெரும்புதூர் தேர்தல் பொதுக்கூட்டத்தில் 1991 மே 21 ஆம் நாளன்று முன்னாள் பிரதமர் இராஜீவ்காந்தியும், அவரோடு 18 பேர்களும் கொல்லப்பட்டனர். பயங்கரவாதம் மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் 1987 (தடா) இந்திய தண்டனைச்சட்டம், வெடிபொருட்கள் சட்டம், ஆயுதங்கள் சட்டம் மற்றும் பிற சட்டங்களின் அடிப்படையில் இவ்வழக்கில் 26 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது. பூவிருந்தவல்லி சிறப்பு நீதிமன்றத்தில் இது குறித்த விசாரணை நடைபெற்றது. இறுதியில் குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் – 26 பேருக்கும் – சிறப்பு நீதிமன்றத்தில் தூக்கு தண்டனை வழங்கப்பட்டது. இவ்வழக்கின் மேல் முறையீட்டு மனு உச்ச நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டது. ஆனால் தடாச் சட்டப்பிரிவுகள் 3(3), 3(4) மற்றும் பிரிவு 5 ஆகியவற்றின் அடிப்படையில் சிறப்பு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனையை உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் தள்ளுபடி செய்தது. இந்திய தண்டனைச் சட்டம், ஆயுதங்கள் சட்டம், வெடிபொருட்கள் சட்டம் மற்றும் பிற சட்டங்களின் அடிப்படையில் தொடர்புடைய குற்றத்தையும், அதற்கான தண்டனையை மட்டுமே உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1) நளினி (A1)
2) சாந்தன் என அழைக்கப்படும் ரகுராஜ் (A2)
3) முருகன் என அழைக்கப்படும் தாஸ் (A3)
4) இராபர்ட் பயஸ் (A9)
5) ஜெயகுமார் (A10)
6) இரவிச்சந்திரன் என அழைக்கப்படும் ரவி(A16)
7) பேரறிவாளன் என அழைக்கப்படும் அறிவு (A18)

– ஆகிய ஏழு பேருக்கு மட்டுமே இந்திய தண்டனைச் சட்டம் 120B/302 அடிப்படையில், செய்யப்பட்ட குற்றங்களுக்கான தண்டனையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது. எஞ்சியுள்ள குற்றம் சாட்டப்பட்ட 19 பேரது குற்றத்தையும், தண்டனையையும் உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. சிறு குற்றங்களுக்காகச் சிலர் தண்டிக்கப்பட்டனர் சிறையில் உரிய காலம் அடைக்கப்பட்டிருந்ததால் சிலர் விடுதலையும் செய்யப்பட்டனர் சிலர் முழுமையாகக் குற்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏழு பேரில், நளினி – சாந்தன் – முருகன் – பேரறிவாளன் ஆகிய நால்வரது தூக்கு தண்டனை மட்டும் உறுதி செய்யப்பட்டது. எஞ்சியிருந்த மூவருக்கும் வாழ்நாள் சிறை தண்டனை வழங்கப்பட்டது.

தூக்கு தண்டனை உறுதியாக்கப்பட்ட நால்வரும், தண்டனை குறைப்புக் கோரி விண்ணப்பித்தனர். 2000 ஏப்ரல் மாதத்தில் நளினிக்கு மட்டும் தூக்கு தண்டனையை வாழ்நாள் சிறை தண்டனையாகக் குறைத்து தமிழக ஆளுநர் ஆணை வழங்கினார். (பார்க்க: கடிதம் எண் 406/ நாள் 24.4.2000 / உள்துறை அமைச்சகம், தமிழ்நாடு அரசு) சாந்தன் – முருகன் – பேரறிவாளன் ஆகியோரது தண்டனைக் குறைப்பு விண்ணப்பம், இந்தியக் குடியரசுத் தலைவரிடம் கடந்த 12 ஆண்டுகளாக நிலுவையில் கிடந்து, 2011 ஆகஸ்ட் மாதத்தில் மறுக்கப்பட்டுள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

**தண்டனைக்குறைப்புக் கோரி புதிதாக விண்ணப்பிப்பதற்கான பின்னணி குறித்த விவரம்**

தண்டனைக் குறைப்புக் கோரி மீண்டும் மீண்டும் விண்ணப்பிக்க சட்டத்தில் இடமுண்டு. மூவரது கருணை மனுக்களும் இந்தியக் குடியரசு தலைவரால் மறுக்கப்பட்டிருந்தாலும், மீண்டும் தண்டனை குறைப்புக் கோரும் அவர்களது விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள தமிழக அரசுக்கோ, தமிழக ஆளுநருக்கோ எவ்விதத் தடையும் இல்லை.

‘‘கருணை மனு ஒன்று மறுக்கப்பட்டாலும், குடியரசுத் தலைவரது அல்லது ஆளுநரது அதிகாரம் முற்றிலும் முடிந்துவிட்டதாக ஆகாது’’ என ஜி.கிறிஸ்ட கவுட் மற்றும் ஜே. பூமய்யா (எதிர்) ஆந்திரப்பிரதேச அரசு (1976(1) SCC 157) வழக்கில் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. எனவே அடுத்தடுத்து கருணை மனுக்கள் போடுவதும், அவற்றைக் குடியரசுத் தலைவர்/ஆளுநர் மீண்டும் மீண்டும் ஆய்வு செய்வதும் ஏற்கத்தக்கதே ஆகும். இதற்குத் தமிழ்நாட்டிலேயே முன்னுதாரணம் உள்ளது.

ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த கோவிந்தசாமி என்பவரது கருணை மனுக்களும் ரிட் மனுக்களும் அடுத்தடுத்து மறுக்கப்பட்ட போதும் 2000 மார்ச்சு மாதத்தில் பி.யு.சி.எல் மத்திய அரசுக்குப் புதிதாக ஒரு கருணை மனுவைக் கொடுத்தது. உடனடியாகத் தண்டனைக்கு செயல்நிறைவேற்றல் தடை (Executive

www.tamilarangam.net

Stay) வழங்கப்பட்டு, இறுதியில் மத்திய அரசின் பரிந்துரையின் பேரில் இந்தியக் குடியரசுத் தலைவர், தூக்கு தண்டனையை வாழ்நாள் சிறை தண்டனையாகக் குறைத்து ஆணையிட்டார். கோவிந்தசாமியின் உயிர் பி.யு.சி.எல். அமைப்பால் கடைசி நேரத்தில் காப்பாற்றப்பட்டு, தற்போது அவர் கோவை மத்திய சிறையில் உள்ளார்.

**ஆளுநரின் அதிகாரம்**

தண்டனைக் குறைப்பு விண்ணப்பம் முன்னதாகக் குடியரசுத் தலைவரால் மறுக்கப்பட்டிருந்தாலும், மன்னிப்பு அல்லது தண்டனைக் குறைப்புச் செய்யும் ஆளுநரின் அதிகாரத்தை அது பாதிக்காது. ஆளுநரின் அதிகாரம் கட்டற்றது, முழுமையானது.

சிறைக்கைதிகளுக்கு கருணை காட்டும் அதிகாரம் என்பது காலங்காலமாக இருந்துவரும் தனிச்சிறப்பான அதிகாரமாகும். ''மன்னிப்பு வழங்கும் தனிச்சிறப்புரிமை அதிகாரம், நமது அரசமைப்பு விதிகள் 72 மற்றும் 161 ல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது'' என டெல்லி அரசு (எதிர்) பிரேம்ராஜ் (2003(7) SCC 121) வழக்கில் உச்ச நீதிமன்றமும் உறுதி செய்துள்ளது. ''இவ்வதிகாரம் முழுமையானது, கட்டற்றது, விதிகளால் தடுக்க இயலாதது'' எனவும் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. (பஞ்சாப் அரசு (எதிர்) ஜோகீந்தர் சிங், 1990(2) SCC 661)

நமது அரசமைப்புச் சட்டம் கூட்டமைப்பு வடிவத்தில் தனித்தன்மை கூறுகளும் இணைந்த ஒன்றாகும். சில அதிகாரங்கள் மத்திய அரசிடமும், சில அதிகாரங்கள் மாநில அரசுகளிடமும் தன்னாட்சி உரிமையோடு அளிக்கப்பட்டுள்ளன. எனவே மாநிலங்கள் என்பவை வெறுமனே மத்திய அரசின் முகவர்களோ அல்லது தூதர்களோ அல்ல! மத்திய அரசும், மாநில அரசும் இந்திய அரசமைப்புச்சட்டத்திலிருந்துதான் தமக்கான அதிகாரத்தைப் பெறுகின்றன. அரசமைப்புச்சட்டம் பாகம் X அத்தியாயம் II, ''நிர்வாக உறவுகள்'' என்ற தலைப்பில் உள்ளது. ''மத்திய அரசின் செயல்படுத்தும் அதிகாரத்திற்குத் தடையோ, தீங்கோ ஏற்படாதவாறு ஒவ்வொரு மாநில அரசின் செயற்படுத்தும் அதிகாரமும் பயன்படுத்தப்பட வேண்டும். மத்திய அரசும் தேவையான வழிகாட்டுதலை மாநில அரசுக்கு வழங்கும் வகையில் அமைய வேண்டும்'' என 257 ஆம் விதி குறிப்பிடுகிறது. குடியரசுத் தலைவரால் தண்டனைக் குறைப்புக் கோரும் கருணை மனு மறுக்கப்பட்ட பிறகு, தண்டனை குறைப்புக் கோரும் புதிய மனுக்களை ஆளுநர் பெறுவதா வேண்டாமா என்பது குறித்து இந்திய அரசு, செயற்படுத்தும் சில குறிப்புகளை விதி 257ன் கீழ் குறிப்பிட்டுள்ளதாகத் தெரியவருகிறது. ஆனால் இக்குறிப்பின் தன்மை என்ன என்பது பொது அரங்கில் இன்று வரை வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் அக்குறிப்பின் தன்மை எதுவாக இருப்பினும், அது தண்டனை குறைப்புக் கோரும் புதிய விண்ணப்பங்களை பரிசீலிக்கும் ஆளுநரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவோ, வரையறைக்கு உட்படுத்தவோ அல்லது தடுக்கவோ இயலாது. ஏனெனில் விதி 161 ன்படி ஆளுநரின் அதிகாரம் முழுமையானது, கட்டற்றது, விதிகளால் வரையறைக்கு உட்படுத்த முடியாதது என உச்ச நீதிமன்றம் திரும்பத்திரும்பக் குறிப்பிட்டுள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் 257 ஆவது விதியின் அடிப்படையில் வழங்கப்படும் எந்த ஒரு வழிகாட்டுதலும், ஆளுநரின் அதிகாரத்தை விதி 161 ன் அடிப்படையில் தடுக்க முடியாது. மரண தண்டனையை வாழ்நாள் சிறை தண்டனையாக மாற்றும் மாநில அரசின் அதிகாரம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 161 ஆம் விதியின் கீழ் அமைச்சரவை மூலம் ஆளநரால் செயல்படுத்தப்படும். இந்திய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தண்டனைச் சட்டம் பிரிவு 54 மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 433 ன் கீழ், மாநில அரசு செயற்படுத்தும் அதிகாரத்திற்கும் இந்த முன்மொழிவு பொருந்தும். இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையிலும் இந்த அதிகாரம் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையிலும், மரண தண்டனையை வாழ்நாள் சிறை தண்டனையாக மாற்றக் கூடிய அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு. இராஜீவ்காந்தி கொலை வழக்கு, மத்திய புலனாய்வுத் துறையால் விசாரிக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருந்தாலும், குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை வழங்கப்பட்டது தமிழ்நாட்டில்தான். மேலும் இவ்வழக்கில் தண்டனை பெற்ற நளினிக்குத் தண்டனைக் குறைப்பு வழங்கியது தமிழ்நாடு அரசுதான் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

மாநில அமைச்சரவையின் அறிவுரையின் அடிப்படையில் ஆளுநர் தண்டனைக் குறைப்பு விண்ணப்பங்களைப் பரிசீலிக்கலாம். நளினியின் தண்டனை அவ்வாறுதான் குறைக்கப்பட்டது.

**தடா வழக்கிலிருந்து நீக்கப்பட்டதன் விளைவு**

இராஜீவ்காந்தி கொலை சம்பவம் பற்றிக் குறிப்பிடும் பொழுது, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு சில விவரங்களைச் சுட்டிக்காட்டுகிறது.

இச்சம்பவத்தில் 18 பேர் கொல்லப்பட்டதன் விளைவாக இந்திய மக்களிடையே பெரும் பீதி உருவாக்கப்படும் என்ற விவரம், சாட்சியமாகப் பெரிதுப்படுத்தப்படுகிறது. ஆனால் இராஜீவ் காந்தியைத் தவிர வேறு எந்தவொரு இந்தியனது மரணத்தையும் இவர்களில் ஒருவரேனும் விரும்பினார்கள் என்பதற்கான ஆதாரம் முழுமையாக இல்லை. எனவே தடா பிரிவின் கீழ் இவர்கள் மீதான வழக்கைத் தொடர முடியாது எனவும் உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாகத் தீர்ப்பளித்து விட்டது. மேலும் இலங்கையில் இந்திய அமைதிப்படை செய்த அட்டூழியங்களுக்குப் பழிவாங்கவே ஸ்ரீபெரும்புதூர் சம்பவம் நடைபெற்றது என்பது சாட்சியங்கள் மூலம் தெரியவருவதாகவும் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்திய அரசுக்கு எதிராகவோ, எந்த ஒரு காவல்துறை அதிகாரியைக் கொலை செய்ய வேண்டுமென்றோ சதித்திட்டம் தீட்டவில்லை. இதற்கு நீதிமன்றத்தில் எந்தவிதமான சாட்சியமும் இல்லை. [பத்தி 59/61/67 – உச்சநீதிமன்றத் தீர்ப்பு] [‘அரசு (எதிர்) நளினி மற்றும் பலர்’, 1999 (5) SCC 253] எனவே இக்குற்றத்தின் பின்னணியை மனதிற் கொண்டு இவர்களுக்கான மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம்.

மன்னிப்பு/தண்டனைக் குறைப்பு ஆகியவற்றை வழங்கும் போது ஆளுநர்/குடியரசுத்தலைவர் ஆகியோர் சட்ட நிலையைத் தாண்டி முடிவெடுக்கும் அதிகாரத்தையும் கடமையையும் கொண்டுள்ளனர். வழக்கு மன்றத்தில் வைக்கப்படாத, குற்றத்தின் சமூகப்பின்னணி குறித்த விவரங்களை மன்னிப்பு வழங்கும்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆட்சித்துறைக்கு அதிகாரம் உண்டு. அப்பொழுது குற்றவாளி எனத்தீர்ப்பளிக்கப்பட்டவரது நடத்தை, குடும்பம், கலாச்சாரப்பின்னணி, உளவியல் ஆகியவற்றையும், சிறையில் அடைக்கப்படும் முன்பு – அடைக்கப்பட்டிருந்தபொழுது – மற்றும் சிறையில் அடைக்கப்பட்ட பிறகு அவரது நடத்தை ஆகியவற்றையும் தண்டனைக்குறைப்பின்பொழுது கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'கேஹர் சிங் (எதிர்) இந்திய அரசு' வழக்கில், [ 1989(1) SCC 204 ] ஒரு குற்றம் அல்லது தண்டனை குறித்து நீதிமன்றம் எடுத்த முடிவிற்கு மாற்றாக வேறு ஒரு முடிவினை எடுக்கலாம் என உச்சநீதிமன்றத்தின் அரசியல் சட்ட நடுவர்ஆயம் (Constitutional Bench) எடுத்துரைத்துள்ளது.

தமிழ்நாடு அரசு மரண தண்டனையைக் குறைத்துப் பல்வேறு சமயங்களில் முடிவெடுத்துள்ளது. நளினியைத் தவிர,

1. தியாகராஜன் எனும் தியாகு
2. இலெனின் (எ) அரங்கசாமி
3. குருமூர்த்தி
4. கலியபெருமாள்

– ஆகியோருக்கும் முன்னதாகத் தமிழக அரசால் தண்டனைக்குறைப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, நீதிமன்றத்தில் எடுத்து வைக்கப்பட்ட பல்வேறு விவரங்களைக் கடந்து, தமிழக அரசு இவ்வழக்கில் சுதந்திரமானதோர் முடிவை எடுக்கலாம். அதுமட்டுமல்ல, ஒன்றுக்கும் மேற்பட்ட கருணை மனுக்களை ஏற்கவும் சட்டத்தில் வழிவகை உள்ளது. எனவே சாந்தன் – முருகன் – பேரறிவாளன் ஆகியோரது முந்தைய கருணை மனு, மத்திய அமைச்சரவையின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவரால் மறுக்கப்பட்டது என்ற காரணம், இப்பொழுது மீண்டும் புதிய தண்டனைக் குறைப்பை/கருணை மனுவைப் பரிசீலிப்பதற்குத் தடையாக இருக்க முடியாது. ஆகவே [54/55A(IPC) பிரிவு 433(a) & 432(7) Cr.P.C ] மற்றும் இந்திய அரசமைப்புச்சட்ட விதி 161 ஆகியவற்றின் அடிப்படையில் மரண தண்டனையை வாழ்நாள் சிறை தண்டனையாகத் தமிழக அரசு குறைக்க முடியும்.

**தண்டனைக் குறைப்பிற்கான பின்னணி**

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர்.அப்துல் கலாம்(2002 – 2007) தனது பதவிக் காலத்தில் மரண தண்டனைக் குறைப்பு விண்ணப்பங்களை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்பொழுது சில அடிப்படை அளவுகோல்களை உருவாக்கி, உள்துறை அமைச்சகத்திற்கு வழிகாட்டினார். அவையாவன –

1. எந்த ஒரு விண்ணப்பத்தைப் பரிந்துரைக்கும் முன்பும் உள்துறை அமைச்சகம், வழக்கின் சமூகவியல் கூறுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
2. சட்டக்கூறுகள் தவிரவும், ஒவ்வொரு வழக்கின் மனிதாபிமான மற்றும் இரக்கங்காட்டத்தக்க அம்சங்களையும் அமைச்சரவை பரிசீலிக்கவேண்டும். தண்டனைக்கைதியின் வயது, அவரது உடல் நிலை மற்றும் மன நிலை ஆகியனவும் இதில் உள்ளடங்கும்.
3. மரண தண்டனையை வாழ்நாள் சிறை தண்டனையாகக் குடியரசுத் தலைவர் குறைத்தால் குற்றம் சாட்டப்பட்டவர் மீண்டும் குற்றம் புரியும் வாய்ப்பு உள்ளதா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும்.
4. தண்டனைக் கைதியின் குடும்பத்தினரது பொருளாதாரப் பொறுப்புக்கள் குறித்தும் பரிசீலிக்கவேண்டும்.

'சந்தாசிங் (எதிர்) பஞ்சாப் அரசு' [AIR 1976 SC 2386] வழக்கில், தண்டனை கொடுப்பதற்கு முன் சில விஷயங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டும் என உச்ச நீதி மன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது. தண்டனை வழங்குவதற்கு முன் கவனிக்கவேண்டிய அம்சங்கள், தண்டனை குறைப்பிற்கும் பொருந்தக் கூடியவையே ஆகும். அவையாவன

''கைதியின் முந்தைய வரலாறு (அப்படி ஏதேனும் இருந்தால் ) அவரின் வயது, வேலை, கல்வி, வீட்டு வாழ்கை, மனச் சமநிலை, சமூக நல்லிணக்கம், உணர்வு மற்றும் மனநிலை, மீண்டும் மறுவாழ்விற்கான வாய்ப்பு, சமூகத்தோடு ஒன்றிணைந்து இயல்பான வாழ்விற்குத் திரும்பும் வாய்ப்பு, நடத்தை மற்றும் பயிற்சி பெறும் வாய்ப்பு, வழங்கப்பட்ட தண்டனை மீண்டும் குற்றம் புரியாமல் தடுக்கும் வாய்ப்பு'' போன்றவை கவனத்தில் கொள்ளப்படலாம்.

**சாந்தன் – முருகன் – பேரறிவாளன் ஆகியோர் சிறையிலும், தண்டனைக்கு முன்பும் பின்பும் வாழும் முன்மாதிரியான வாழ்க்கை.**

கடந்த 20 ஆண்டுகளாக இம்மூவரும் மற்றவர்களுக்கு முன்மாதிரியானதோர் வாழ்கை வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் மீது இச்சம்பவத்திற்கு முன்னால் குற்றப்பதிவுகள் ஏதும் இல்லை. சிறையில் இருக்கும் கடந்த 20 ஆண்டுகளாக இம்மூவரும் சமூக ரீதியாகப் பயனுடையவர்களாகவும், வேலூர் சிறையிலுள்ள மற்ற அனைவருக்கும் உதவி புரியக்கூடியவர்களாகவும் இருந்து வந்துள்ளனர். சிறையில் உள்ள பிற கைதிகளுக்குக் கல்வி புகட்டுவதிலும் கலைக் குழுக்களைக் கட்டி அமைப்பதிலும், சிறை அலுவலர்களுக்குத் துணை நிற்பதிலும் பயனுடையவர்களாகத் திகழ்கின்றனர்.

**I அறிவு எனப்படும் பேரறிவாளன்**

கைது செய்யப்பட்ட போது பேரறிவாளனின் வயது 19. அப்பொழுது அவர் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் 86 விழுக்காடு மதிப்பெண் பெற்று, மின்னணுவியல் மற்றும் செய்தித் தொடர்பு பிரிவில் பட்டயச் சான்றிதழ் பெற்றிருந்தார். சிறையில் இருந்த மிக நீண்ட காலத்தில், இந்திரா காந்தி திறந்தவெளிப்பல்கலைக்கழகம் மூலம் கணினிப் பயன்பாட்டுத் துறையில் இளங்கலைப் பட்டம் (B.C.A) பெற்றார். தற்பொழுது அவர் அதில் முதுகலைப்பட்டம் (M.C.A) படித்து வருகிறார்.

சிறையில் கல்வியற்ற மற்றும் சுமாராகக்கல்வி பயின்ற எண்ணற்ற கைதிகள், கல்வி கற்பதற்கு இவர் உறுதுணையாக இருந்து வந்துள்ளார். பல கைதிகள் பத்தாம் வகுப்பு/ பன்னிரண்டாம் வகுப்பு மற்றும் பட்டப்படிப்பு ஆகியவற்றில் தேர்ச்சி பெற இவர் உதவியுள்ளார். சிறையில் ஒரு கலைக்குழுவை உருவாக்கி, இசையில் ஈடுபாடு உடையவர்களுக்கு இசைக்கருவிப் பயிற்சி, பாடல் பயிற்சி ஆகியவை பெற உதவியுள்ளார். இந்த இசைக்குழு, சிறை கைதிகள் மற்றும் சிறை அதிகாரிகள் மகிழும் வண்ணம் இசை நிகழ்சிகள் நடத்தி வருகிறது. மேலும் 'இலக்கியம் மாறுமா?' எனும் ஒரு நாடகத்தையம் கைதிகள் நடிப்பதற்காகப் பேரறிவாளன் எழுதித்தந்துள்ளார். அண்மையில் வேலூர் சிறைக்கு வந்த சிறைத்துறை அமைச்சர் முன்னால் பேரறிவாளனும் அவரது இசைக்குழுவும் கலை நிகழ்சிகளை நடத்தி அமைச்சரது பெரும் பாராட்டினைப் பெற்றனர்.

பேரறிவாளனின் உதவியால் கல்வி பயின்று விடுதலையான கைதிகள், சிறைக்கு வெளியே சென்று **"பேரறிவாளன் கல்விப்பாசறை"** எனும் சேவை அமைப்பை உருவாக்கியுள்ளனர். அவ்வமைப்பின் மூலம் ஏழை எளிய குழந்தைகளுக்குத் தேவையான கல்விசார் உதவிகளைச் செய்து அரும்பணி ஆற்றி வருகின்றனர்.

www.tamilarangam.net

கடந்த 20 ஆண்டுகளில் எவ்வித சிறைக்குற்றத்தையும் பேரறிவாளன் செய்யவில்லை என்பதோடு சிறை அதிகாரிகளின் கண்டனத்திற்கும் உள்ளானதில்லை.

பேரறிவாளன் பெற்றோர் இருவரும் வயது முதிர்ந்தவர்கள். அவர்களது முதுமைக் காலத்தில் அவர்களைப் பேணுவதற்கும் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு வேறு மகன் இல்லை. அவரது தந்தை, **திரு.குயில்தாசன்,** பணி ஓய்வு பெற்ற ஓர் ஆசிரியர். தற்போது அவர் நோய் வாய்ப்பட்டுள்ளார். அவரது அன்னையார் **திருமதி அற்புதம் அம்மாள்** குடும்பத் தலைவியாக உள்ளார். வசதி அதிகம் இல்லாத குடும்பமாகப் பேரறிவாளனின் குடும்பம் உள்ளது. கடந்த இருபது ஆண்டுகளாகப் பேரறிவாளனின் தாயார் **திருமதி அற்புதம் அம்மாள்** ஓய்வறியாமல் அவரது குடும்பத்தைப் பேணிப் பாதுகாத்து வருகிறார். அத்தோடு பேரறிவாளனின் வழக்கு தொடர்பான பணிகளையும் அவர் தொடர்ந்து கவனித்து வருகிறார். தனது மகனைக் கவனித்துக் கொள்வதைப்போலவே, இந்தியாவில் அதிக உறவுகள் இல்லாத சாந்தன் மற்றும் முருகன் ஆகியோரையும் பாகுபாடின்றிப்பேணி வருகிறார்.

**II முருகன் என்றழைக்கப்படும் தாஸ்**

இலங்கையில் பிறந்த முருகன், சிறைக்கு வருமுன் +2 படிப்புத்தேறியிருந்தார். (A level in Sri Lanka) சிறைப்பட்டபிறகு, இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகம் மூலமாக அவர் கணினிப் பயன்பாட்டில் இளங்கலை மற்றும் முதுகலைப்பட்டம் பெற்றுள்ளார். (B.C.A & M.C.A) மேலும் அவர் வானொலி மற்றும் தொலைக்காட்சி இயந்திரவியல் படிப்பில் சான்றிதழ் பெற்றுள்ளார். மேலும் இருசக்கரவாகன இயந்திரவியல் படிப்பிலும் சான்றிதழ் பெற்றுள்ளார். அவர் ஒரு சிறந்த ஓவியரும் கூட. 2009 ஆம் ஆண்டு அவர் வரைந்த ஓவியங்களின் கண்காட்சி, சிறைத்துறை முன்னாள் இயக்குநர் திரு.நடராஜ் IPS அவர்களால் திறந்துவைக்கப்பட்டுப் பாராட்டுப்பெற்றது. சக கைதிகளுக்கும், சிறைப்பணியாளர்களுக்கும் மிகவும் உதவியாக இருந்து வருகிறார் முருகன். கடந்த இருபது ஆண்டுகளில் முருகன் சிறைக்குற்றம் ஏதும் செய்யவில்லை என்பதோடு, சிறை அதிகாரிகளின் கண்டனத்திற்கும் உள்ளானதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**III சாந்தன் என்றழைக்கப்படும் ரகுராஜ்**

இலங்கையில் பிறந்த சாந்தன், சிறைக்கு வருமுன் பத்தாம் வகுப்புத் தேறியிருந்தார் (O level in Sri Lanka). சிறந்த எழுத்தாளரான இவர், பல கவிதைகள், சிறு கதைகள் மற்றும் புதினங்களை எழுதியுள்ளார். “13.05.2009” என்ற பெயரில் அவர் எழுதிய புதினம், இலக்கிய அமைப்புகள் பலவற்றால் பாராட்டப்பட்டுள்ளது. அவரது கவிதைகள், தமிழ்ப்பத்திரிகைகள் சிலவற்றிலும் வெளிவந்துள்ளது.

சாந்தன், மிகவும் ஆன்மீக உணர்வு உடையவர்; பக்திமான். வேலூர் சிறையிலிருக்கும் கோயிலின் பொறுப்பை இவர் ஏற்றுக்கொண்டு, நாள்தோறும் அக்கோயிலில் பூசைகள் செய்து வருகிறார். சக கைதிகளும், சிறைப் பணியாளர்களும் மிகவும் மதிக்கத்தக்கவராக இவர் இருந்து வருகிறார்.

பொதுவாக, சாந்தன் – முருகன் – பேரறிவாளன் ஆகிய மூவரும் சிறையில் உதவிபுரிபவர்களாகவும், ஒழுக்கம் மிக்கவர்களாகவும், கட்டுப்பாடு மிக்கவர்களாகவும் விளங்குவதோடு, சககைதிகளுக்கும் சிறைப்பணியாளர்களுக்கும் உதவிகரமாகவும் வாழ்ந்து வருகின்றனர். தங்களைக்காட்டிலும் வாய்ப்புக்குறைவாக உள்ளவர்களுக்கு,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்றாட வாழ்விற்குத் தேவையான பயிற்சிகளைக் கற்றுத் தருகின்றனர். சிறை வாழ்க்கை தரும் மனச்சோர்விலிருந்து சக கைதிகளை விடுவிக்கும் வகையில், அவர்களைக் கலைகளால் மகிழ்வித்து வருகின்றனர். மேலும் கைதிகளின் சமூகரீதியான தேவைகளையும், உணர்வு மற்றும் ஆன்மீகத் தேவைகளையும் நிறைவேற்றத்தக்க வகையில் பங்குபணி ஆற்றிவருகின்றனர். அவ்வகையில் இவர்களைக் கொல்வதால் யாருக்கும் எவ்விதப்பயனும் கிடைக்கப்போவதில்லை. எனவே, தூக்குக் கொட்டடியிலிருந்து அவர்கள் வாழ்வு காப்பாற்றப்படவேண்டும். பொறுப்புவாய்ந்த குடிமக்களாகவும், இயல்பான வாழ்க்கை நடத்தத்தக்க தகுதியுடையவர்களாகவும் இருக்கின்றோம் என்பதை இவர்கள் மெய்ப்பித்துக் காட்டியுள்ளனர் என்பது குறிப்பிடவேண்டிய முக்கியச் சேதியாகும்.

மேற்குறிப்பிட்ட உண்மைகளின் அடிப்படையில் பார்க்கும்பொழுது, சாந்தன் – முருகன் – பேரறிவாளன் ஆகிய மூவரும், இந்தியக்குடியரசுத் தலைவரின் தண்டனைக்குறைப்புக்குத் தேவையான அடிப்படை அளவுகோலுக்கு ஏற்றவர்களாக உள்ளனர் என்பது தெளிவாகும். பயங்கரவாதச் செயல் செய்வதோ, சீர்குலைவு நடவடிக்கையில் ஈடுபடுவதோ இம்மூவரின் நோக்கமல்ல என்பதை உச்ச நீதிமன்றத் தீர்ப்பு திட்டவட்டமாக எடுத்துக்காட்டுகிறது. இச்சம்பவம் நடைபெற்றபொழுது, இம்மூவரும் மிக இளம் வயதினராக இருந்துள்ளனர். மேலும் சிறையிலிருந்த காலத்தை வீணே கழிக்காமல், தங்களது கல்வித்தகுதியை மேம்படுத்திக் கொண்டுள்ளனர் அதன் மூலம் அவர்கள் சமூகப்பொறுப்பும், பொருளாதாரப் பயன்பாடும் உள்ளவர்கள் என்பதையும் மெய்ப்பித்துள்ளனர்.

மேலும் கடந்த இருபது ஆண்டுகளில் அவர்களது உதவி மனோபாவம், அன்பு கொள்ளத்தக்க தன்மை, நல்லிணக்கம், ஏழை – எளிய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்குக் கல்விகற்பித்த செவ்விய பண்பு ஆகியன, இவர்கள் மீண்டும் குற்றம் இழைக்க மாட்டார்கள் என்பதைத் தெளிவாக்குகிறது.

**மிக நீண்ட காத்திருப்பு**

இம்மூவரும் 1991 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டனர். சட்ட நடைமுறைகள் 1999 ஆம் ஆண்டு முடிவுற்று, நளினி – சாந்தன் – முருகன் – பேரறிவாளன் ஆகியோருக்கு மரணதண்டனை உறுதி செய்யப்பட்டது. பின்னர் நளினியின் தண்டனை குறைக்கப்பட்டது.

பிறகு சாந்தன் – முருகன் – பேரறிவாளன் ஆகியோரது கருணை மனுக்கள் 1999 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டது. அதன்பின் இக்கருணை மனு 12 ஆண்டுகளாக நிலுவையில் இருந்து, 2011 ஆகஸ்டு மாதத்தில் இந்தியக் குடியரசுத்தலைவரால் நிராகரிக்கப்பட்டுள்ளது. கடந்த மிக நீண்ட 20 ஆண்டுச் சிறைவாழ்வில், குடும்பக் காரணமாகவோ அல்லது வேறு முகாந்திரத்திலோ ஒருமுறை கூட பரோலில் வெளிவந்து இவர்கள் வெளி உலகைப் பார்த்ததில்லை. குறிப்பாக, உயர்நீதிமன்றம் தூக்கு தண்டனையை உறுதி செய்தபின், கடந்த 12 ஆண்டுகளாக அவர்களது கருணை மனுவின் கதி என்ன என்பது தெரியாத கையறு நிலையிலேயே அவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.

'திருமதி திரிவேணிபென் (எதிர்) குஜராத் அரசு' வழக்கில், உச்சநீதிமன்றத்தின் அரசமைப்பு நடுவர் ஆயம் (Constitution Bench) [1989(1) SCC 678] மரண தண்டனை நிறைவேற்றத்தில் விளக்கமுடியாத நீண்ட காலதாமதம், அடிப்படை உரிமைகளை (Fundamental Rights) மீறுவதற்கு ஒப்பானதாகும் எனக் குறிப்பிட்டுள்ளது. இதன் அடிப்படையில், பிறகு வந்த உச்சநீதிமன்றத்தின் நடுவர் ஆயம், 'தயாசிங்(எதிர்) இந்திய அரசு' [1991(3) SCC

www.tamilarangam.net

61] வழக்கில் மரண தண்டனை நிறைவேற்றுவதில் ஏற்படும் தாமதம், அரசமைப்பு விதி 21க்கு எதிரானது. இதன்விளைவாக மரணதண்டனையையே அகற்றக்கோரும் உரிமையை குற்றம் சாட்டப்பட்டவருக்கு அளிக்கிறது என குறிப்பிட்டுள்ளது.

'சேர் சிங்(எதிர்) பஞ்சாப் அரசு' [(1983) 2 SCC (Cri)] 248 வழக்கின் தீர்ப்பு, தூக்கு தண்டனைக் கைதிகளின் தண்டனை நிறைவேற்றத்தில், தொடர்ச்சியான காலதாமதம் ஏற்படுத்தும் உளவியல் பாதிப்புக்களைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. 'ஜெகதீஸ் (எதிர்) மத்தியப்பிரதேச அரசு' [(2009) 9 SCC 495] வழக்கிலும் தூக்கு தண்டனைக் கைதிகளின் நிலையை வேதனையோடு உச்சநீதிமன்றம் வெளிப்படுத்தியுள்ளது.

நியாயமான கால இடைவெளியில் கருணை மனு குறித்து ஒரு முடிவு எடுக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் தண்டிக்கப்பட்ட கைதிக்குச் சாதகமாக அந்த அதிகாரம் செயல்படவேண்டும். நம்பிக்கை அடிப்படையில் 15 ஆண்டுகளோ அதற்கு அதிகமாகவோ வாழ்ந்து வந்தாலும் மரண தண்டனைக் கைதி, மிகுந்த அச்சத்தால் சூழப்பட்டிருக்கிறான். தனது வாழ்வு அந்தரத்தில் தொங்குவதாக அவன் உணர்கிறான். மேலும் கருணை மனு பரிசீலிக்கும் அதிகாரிக்கு, மரண தண்டனைக் கைதி தன் பட்டியலில் உள்ள ஒரு எண் மட்டுமே எனவும், அந்த அதிகாரிக்குத் தன்மீதோ, தன் குடும்பத்தின் வேதனை குறித்தோ எவ்வித அக்கறையும் இல்லை என்பதையும் அவன் உணர்ந்திருக்கிறான்.

இதற்கு இணையாகவே, இத்தகைய கைதியின் குடும்பத்தினர், அவரது பெற்றோர், மனைவி மற்றும் குழந்தைகள், சகோதர சகோதரிகள் ஆகியோரும் இயக்கமற்று அசையாமல் நரகத்தில் உழல்கின்றனர்.மேலும் தங்களது நேசத்துக்குரியவரது நிச்சயமற்ற தலைவிதி குறித்து அறியாததால் அவர்களால் வாழ்வில் எழுந்து கூட நிற்க முடியாத அவல நிலை ஏற்படுவதை எண்ணிப் பார்க்கவேண்டும். கையறு நிலை, வெறுமை, மனக்கசப்பு ஆகியவற்றால் குடும்பத்தினுள் இறுதியாக உண்டாகும் புறக்கணிப்பு, மனச்சோர்வு ஆகியவைதான் சிறைக்கைதியை மோசமான நிலைக்குத் தள்ளுகிறது.

''மகிழ்ச்சியற்ற இத்தனிமனிதர்களின் குற்றமா இது? இவ்வளவு அருவருக்கத்தக்க முறையில்தான் இவர்கள் நடத்தப்படவேண்டுமா என்றுதான் கேட்க வேண்டியுள்ளது''. (தீர்ப்பின் பத்திகள் 48,50,51)

இம்மூவரின் வழக்கில் கருணை மனுவைப்பரிசீலனை செய்வதில் மிக நீண்ட தாமதம் ஏற்பட்டுள்ளது என்பது தெளிவு. இத்தகைய தாமதம் சிறைக்கைதிகளிடமும், அவரது குடும்பத்தினரிடமும் கடும் பாதிப்பை உருவாக்கும் என உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. இதைப் போன்ற தீய தாமதமே கொடிய, இழிவான மனிதத்தன்மையற்ற நடத்தையை உருவாக்கும். இது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 21 ஆவது விதியை மீறியதாகும். இத்தகைய தாமதம் சாந்தன் – முருகன் – பேறிவாளன் ஆகியோரது மரணதண்டனையைக் குறைக்கத் தேவையான வலுவான அடிப்படையை உருவாக்கியுள்ளது.

சாந்தன் – முருகன் – பேறிவாளன் ஆகியோரது மரணதண்டனைக்கு எதிராக தமிழ்நாடு அரசு செயல் நிறைவேற்றல் தடை (Executive Stay) வழங்கவேண்டும். முன்பே சுட்டிக்காட்டிய வண்ணம், மரணதண்டனையை நிறைவேற்றாமல், செயல் நிறைவேற்றல் தடை விதிப்பதற்கு நிறைய முன்னுதாரணங்கள் உள்ளன.

தற்பொழுது கோவை சிறையில் உள்ள கோவிந்தசாமி என்பவரது கருணை மனுக்கள் முன்பு குடியரசுத்தலைவரால் மறுக்கப்பட்டு, இரண்டு

www.tamilarangam.net

சுற்றுச்சட்டப்போராட்டம் தோல்வியில் முடிந்த பிறகும், 2000 ஆம் ஆண்டில் செயல் நிறைவேற்றல் தடை (ES) வழங்கப்பட்டதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். நடுவண் அரசால் வழங்கப்பட்ட இத்தகைய தடை பல ஆண்டுகள் தொடர்ந்தது. இறுதியில் 2008 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் மரணதண்டனையை வாழ்நாள் சிறைதண்டனையாகக் குறைத்து ஆணையிட்டார்.

மேலும் தண்டனைக் குறைப்புக்கோரும் விண்ணப்பம் மறுபரிசீலனைக்கு உகந்த அடிப்படையைக் கொண்டிருந்தால், அவ்விண்ணப்பம் நிலுவையிலிருப்பதைக் கருத்தில் கொண்டு, தண்டனையை நிறுத்திவைப்பது பொருத்தமானதாகும் என உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது – ‘தயாசிங் (எதிர்) இந்திய அரசு’, [ 1991 (3) SCC 61 ]

எனவே மாண்புமிகு தமிழக முதல்வரும், தமிழக அரசும் இவ்விஷயத்தில் தலையிட்டு பேரறிவாளன் – முருகன் – சாந்தன் ஆகியோருக்கு நேரிடவுள்ள துயரமுடிவைத் தடுத்து நிறுத்துமாறு மக்கள் சிவில் உரிமைக்கழகம் (தமிழ்நாடு/புதுச்சேரி) வேண்டுகிறது. மேலும் மாண்புமிகு தமிழக முதல்வரும், தமிழ்நாடு அரசும் தமது மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி இவர்களது மரணதண்டனையை வாழ்நாள் சிறை தண்டனையாக IPC பிரிவு 54, r/w 55 A; 433(a) r/w 432(7) Cr.P.C. ஆகியவற்றின் அடிப்படையில் தண்டனைக் குறைப்பு செய்ய வேண்டும் எனவும் மக்கள் சிவில் உரிமைக் கழகம் வேண்டுகிறது. சட்டம், கருணையின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டால்தான், உண்மையான நீதி கிடைக்கும் எனவும் பி.யூ.சி.எல். உறுதியாக நம்புகிறது.

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை, போர்குற்றம் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி தமிழ்நாடு சட்டப் பேரவையில் வரலாற்றுப் புகழ்மிக்க தீர்மானத்தை இயற்றிய சிற்பியாகிய மாண்புமிகு தமிழக முதல்வர், மரண தண்டனையை இந்தியாவில் முதன்முதல் ஒழித்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை நிலைநாட்ட வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் இதற்கு இணையான எடுத்துக்காட்டுகள் உள்ளன. யூனியன் பிரதேசங்கள் தவிர 33 மாநிலங்கள் இந்தியாவில் இருப்பது போல், அமெரிக்காவில் 50 மாநிலங்கள் உள்ளன. மத்திய அரசு அளவில் மரணதண்டனை சட்டபூர்வமாக ஏற்கத்தக்க தண்டனையாக இருக்கும்பொழுது, அலாஸ்கா, ஹவாய், ஐயோவா, மெய்ன், மாசேசூசெட்ஸ், மிச்சிகன், மினிசோட்டா, நியூஜெர்சி, வடக்கு டெகோடா, ரோடு ஐலண்டு, வெர்மான்ட், மேற்கு வெர்ஜினியா, விஸ்கான்சின் – மற்றும் கொலம்பியா மாவட்டம் – என 13 மாநிலங்களில் மரண தண்டனை தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே பேரறிவாளன் – முருகன் – சாந்தன் ஆகியோரது மரணதண்டனையை தமிழக முதல்வர் குறைத்தால், அது இங்குள்ள தமிழ் மக்கள், புலம்பெயர் தமிழ் மக்கள் மற்றும் அகில இந்திய, உலக மனித உரிமைச் சமூகத்தால் பரவலாக வரவேற்கப்படும். உலகம் முழுவதுமுள்ள நாடுகளும், அரசுகளும் மரணதண்டனையை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் சபை 2010 டிசம்பர் மாதத்தில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு ஏற்ப தமிழக அரசின் தண்டனைக் குறைப்பு விளங்கும். நவீன நாகரிக சமுதாயத்திற்கு ஒவ்வாத மரண தண்டனையை ஒழித்த உலகெங்குமுள்ள 137 நாடுகளின் அணிவரிசையில், தமிழகமும் இணைந்து நிற்க வேண்டுமென்றும் மக்கள் சிவில் உரிமைக் கழகம் விரும்புகிறது.

❀ ❀ ❀



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்